விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
# Valampurii




E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 096 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 11 சனிக்கிழமை (25.03.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



மட்டக்களப்பில் சிவபூமி திருமந்திர அரண்மனை திறப்பு விழா நேற்று இடம்பெற்றது.

## சுவீகரிக்கப்பட்ட குருந்தூர்மலை காணியை உடன் விடுவிக்குக

### ஜனாதிபதி ரணில் உத்தரவு

(கொழும்பு)

தொல்பொருள் திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்ட குருந்தூர்மலை காணியை உடன் விடுவிக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய அதிகாரிகளுக்கு அறிவித்துள்ளார்.

தமிழர் தாயகத்தில் உள்ள மிக முக்கியமான வரலாற்றுத் தலங்களில் ஒன்றான முல்லைத்தீவு, குருந்தூர்மலை ஆலயத்தின் மேற்கு எல்லையில் தொல்பொருள் திணைக்களத்தி 11

# தேர்தல் தொடர்பில் விரைவில் பேச்சு

## சபையில் பிரதமர் தினேஷ் குணவர்த்தன



(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவது தொடர்பில் தேர்தல்கள் ஆணைக்குழுவின் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக கலந்துரையாடுவதற்கு தேர்தல்கள் ஆணைக்குழுவை அழைக்கவுள்ளதாக மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் பிரதமர் தினேஷ் குணவர்த்தன தெரிவித்துள்ளார். (11ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் மினி சூறாவளி

(வவுனியா)

வவுனியாவில் மினிசூறாவளியுடன் கூடிய மழையினால் பொதுமக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன் மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளது.

வவ்னியாவில் கடந்த சில தினங்களாக மாலை வேளைகளில் இடியுடன் கூடிய மழை பெய்து வருகின்றது. 11

### லங்கா சதொசவில்

## 10 பொருட்களின் விலைகள் குறைப்பு

(கொழும்பு)

லங்கா சதொசவில் 10 வகையான அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளன.

நேற்று முதல் அமுலாகும் வகையில், பொருட்களின் விலைகள் குறைக்கப்பட்டுள்ளதாக லங்கா சதொச வெளியிட்டுள்ள 11

## அரசுக்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கை தீவிரப்படுத்தப்படும்

### தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவிப்பு

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரிக் கொள்கைக்கு எதிராக அடுத்த வாரம் முதல் தமது தொழிற்சங்க நடவடிக்கையைத் தீவிரப்படுத்தவுள்ளதாக தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற 11



## சில மாதங்களில் நாடு முன்னேற்றம் காணும்

### மத்திய வங்கி ஆளுநர் நம்பிக்கை

(கொழும்பு)

சில மாதங்களில் நாடு முன்னேற்றம் காணும் என மத்திய வங்கியின் ஆளுநர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச நாணய நிதியம் எதிர்பார்க்கும் காலத்திற்கு முன்னர் இலங்கையால் கடன் பேண்தகு 11

### கொடிகாமத்தில்

## குடும்பஸ்தர் சடலமாக மீட்பு

(சாவகச்சேரி)

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட தவசிகுளம் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று வெள்ளிக்கிழமை காலை குடும்பஸ்தர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

நெல்லியடிப் பகுதி 11

## யாழில் அரசுக்கு எதிராக இன்று போராட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழில் அரசுக்கு எதிராக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் லசந்த முதலிகே ஏற்பாட்டில் யாழ்ப்பாண பஸ் தரிப்பிடம் முன்பாக காலை 10 மணியளவில் குறித்த போராட்டம் இடம்பெறவுள்ளது. பயங்கரவாதத் தடைச் சட்டம், அரசின் வரிக்கொள்கைக்கு எதிராக குறித்த போராட்டம் நடைபெறவுள்ளது. (ம-7,9)

### 'நீதியரசர்கள் மீது கைவைக்காதே'

## நீதிமன்ற வளாகத்தில் சட்டத்தரணிகள் போராட்டம்




11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்



## பகிரங்க ஏலம் விடுதல்
## சிறுபோகம் - 2023 ஆலய வயற்காணி குத்தகைக்கு விடுதல்
## கிளிநொச்சி அருள்மிகு கந்தசுவாமி தேவஸ்தானம் A9 வீதி கிளிநொச்சி

எமது ஆலயத்திற்கு சொந்தமான கீழ்க் குறிப்பிட்ட காணிகள் எதிர்வரும் 26.03.2023 ஆம் திகதி ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு ஆலய மண்டபத்தில் பகிரங்க ஏலத்தில் விடப்படும்.

- மருதநகர் - 02 ஏக்கர்
- பெரியபரந்தன் LB2.D5 - 10 ஏக்கர்
- பெரியபரந்தன் D7 - 04 ஏக்கர்

**முக்கிய குறிப்பு**

- ஏலத்தில் காணியைப் பெறுபவர் பி.ப. 2.00 மணியளவிற்கு முன் முழுப் பணத்தையும் செலுத்துதல் வேண்டும்.
- காசோலைகள் பொறுப்பேற்கப்பட மாட்டாது.
- ஒரு ஏக்கருக்கு ஏலம் கூறப்பட்டு மொத்த வயற்காணியின் பெறுமதி கணிப்பிடப்படும்.
- சகல விவசாயிகளின் நேரத்தையும் கருத்தில் கொண்டு குறிப்பிட்ட நேரத்திற்கு தவறாது சமூகம் தரவும்.

ஆலய பரிபாலன சபை சார்பில்

| | | |
|---|---|---|
| ச.ஸ்ரீகௌரிபாலா | மா. சிவராசா | சு.வரதராசா |
| தலைவர் | செயலாளர் | பொருளாளர் |
| 077 602 7147 | 077 540 7448 | 077 916 7716 |

(C-6221)

---

## வட மாகாண மக்களுக்கு ஓர் நற்செய்தி

ஐரோப்பிய நாடுகளுக்கான விசிட் விசா ஒரு மாத காலத்தில் ஒழுங்குபடுத்தி தரும் நிறுவனமான

**Hybrid International Hub (pvt) Ltd**

லண்டன், கனடா, அவுஸ்திரேலியா, நியுஸ்லாந்து ஆகிய நாடுகளுக்கான மாணவர் விசா 100% உத்தரவாதத்துடன் முற்கட்டணம் ஏதுமற்ற Sponsor கட்டணங்களற்ற சேவையினையும் வழங்கி வருகிறார்கள்.

நேர்த்தியானதும் நம்பகரமானதுமான சேவையினை பெற்றுக் கொள்ளுங்கள்

(C-6222)

**Contact Us**

LIC Tower - 1st Floor
No.36, Vaithilingam Thuraisamy Road
(Near to Vembady High School)
TP No : 021 222 1265 / 076 250 0098
E.Mail : hybridinternational37@gmail.com

---

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 076 097 3127

---

VILLAGE HOTEL
Northern Point

# VILLAGE HOTEL
## யாழ் - கொழும்பு சேவை மீண்டும் ஆரம்பம்
## AIRPORT PICK UP DROP SERVICE

அன்னை முத்துமாரி பேருந்து சேவை இனிவரும் காலங்களில் VILLAGE HOTEL எனும் பெயரில் அதே நிர்வாகத்தின் கீழ் இயங்கும் என்பதனை அறியத் தருகின்றோம்.

- VILLAGE HOTEL நிர்வாகம் -



(14967)

077 544 8503

---

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 17 . 06 . 1947

மறைவு 21 . 03 . 2023

எமது நண்பன் பார்த்தீபன் அவர்களின் அன்புத் தாயார்

## திருமதி சதீஸ்வரி இரட்ணசிங்கம்

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ்.இந்துக்கல்லூரி
2002 உயர்தரப்பிரிவு நண்பர்கள்.

---

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் 01 . 10 . 1946

விண்ணில் 10 . 04 . 2019

## அமரர் முத்துக்குமாரு தங்கவேல்
(துங்கப்பா)

எம் குடும்ப ஆணிவேரே
எங்களின் வழிகாட்டியே தந்தை
தாய்க்கு முதலிடம் உலகில்
ஆனால் தாய் தந்தைக்கு ஓரிடம்
நம் வீட்டில்
நாமிருக்கும் வரை உங்கள் நினைவுகள்
எம்முடனே
எம் இன்னுயிர் தந்தைக்கு சமர்ப்பணம்

(C-6223)

இங்ஙனம் :
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

தகவல் :
திருமதி தங்கவேல் சந்திரவதனா
நடராசா வீதி, வல்வெட்டித்துறை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தலுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை ஏன் வழங்க முடியாது-சஜித் கேள்வி

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்டத்தில் தேர்தலுக்காக 10 பில்லியன் ரூபாய்ஒதுக்கப்பட்டுள்ள வேளையில், அவ்வாறு ஒதுக்கப்பட்ட பணத்தை தேர்தல் ஆணைக் குழுவிடம் வழங்கி தேர்தலை நடத்துவது அரசின் பொறுப்பாகும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த நிதியை வழங்காதது ஓர் சிறப்புரிமை மீறலாகும் எனவும் உயர்நீதிமன்றம் இதற்கான உத்தரவைக் கூட வழங்கியுள்ளதாகவும் இதற்கேற்ப செயற்படாதது ஜனநாயக விரோதச் செயல் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

நிதியை வழங்கியவுடன் தேர்தல் பத்திரங்களை அச்சிடுவதற்கு அரச அச்சகம் கூட்டுத்தாபணம் தயாராக இருக்கும் போது, உரிய நிதியை விடுவிக்காததற்கு என்ன காரணம் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ பிரதமர் தினேஷ் குணவர்தனவிடம் கேள்வி எழுப்பியுள்ளார். (நி)

# இந்திய பெற்றோலிய அமைச்சகத்தின் செயலாளர் ஐ.ஓ.சி தலைவர் இலங்கை வருகை

(கொழும்பு)

இந்தியாவின் பெற்றோலியம் மற்றும் இயற்கை எரிவாயு அமைச்சகத்தின் செயலாளர் பங்கஜ் ஜெயின் மற்றும் இந்தியன் ஒயில் கோர்ப்பரேஷன் லிமிடெட்டின் தலைவர் ஷிர்காந்த் மாதவ் வைத்யா ஆகியோர் இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்




நாட்டிற்கு வரும் இருவரும், இலங்கையின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்தியன் ஒயில் கோர்ப்பரேஷனின் செயற்பாடுகளை அந்த நாட்டின் பெற்றோலியம் மற்றும் இயற்கை அமைச்சகம் மேற்பார்வையிடுகிறது.

கடந்த ஆண்டின் முற்பகுதியில், லங்கா ஐ.ஓ.சி பிஎல்சி மற்றும் இலங்கை அரசின் கீழ் வரும் சிலோன் பெற்றோலியம் கோர்ப்பரேஷன் ஆகியன இணைந்து டிரின்கோ பெற்றோலியம் டேர்மினல் என்ற கூட்டு முயற்சியை உருவாக்கின.

இதனையடுத்து குறித்த நிறுவனம் தனது வலையமைப்பை மேலும் 50 நிரப்பு நிலையங்களுடன் விரிவுபடுத்துவதற்கு இலங்கை அரசாங்கத்திடம் இருந்து அண்மையில் அனுமதியை பெற்றுக்கொண்டது. இந்த நிலையில் இவர்கள் இருவரின் விஜயம் அமையவுள்ளது. (நி)

# எதிர்காலத்தில் வட்டிவீதங்களை குறைக்க முடியும்-மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து பெறப்படும் நீடிக்கப்பட்ட கடன் வசதி எதிர்காலத்தில் இலங்கையில் வட்டி விகிதங்களைக் குறைக்க உதவும் என இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் நந்தலால் வீரசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த கடன் வசதி கிடைக்காவிட்டால் அரசாங்கம் அதிக வட்டிக்கு நிதியை வசதிகளை பெற்றிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

நேற்று முன்தினம் ஊடகம் ஒன்றில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மூன்றாவது அல்லது நான்காம் காலாண்டுக்குள் இலங்கையின் பணவீக்கத்தை ஒற்றை பெறுமதிக்கு கொண்டு வர முடியும் எனவும் மத்திய வங்கியின் ஆளுநர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# அலிசப்ரி - விஜயதாச ராஜபக்ச தென்னாபிரிக்காவுக்கு பயணம்

(கொழும்பு)

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலிசப்ரி மற்றும் நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச ஆகியோர் தென்னாபிரிக்காவுக்கு பயணம் மேற்கொண்டுள்ளனர்.

உண்மையைக் கண்டறியும்ஆணைக் குழுவை நிறுவுவதில் தென்னாபிரிக்காவின் அனுபவம் குறித்த நுண்ணறிவுகளைப் பெற்றுக் கொள்ளும் வகையில் இவர்களின் பயணம் அமைந் துள்ளது.

தென்னாபிரிக்காவின் சர்வதேச உறவுகள் மற்றும் ஒத்துழைப்பு அமைச்சர் கலாநிதி நலேடி பாண்டூரின் அழைப்பின் பேரில், இவர்கள் தென்னாபிரிக்காவுக்கு தொழில்முறை விஜயத்தை மேற்கொண்டுள்ளார்.

உள்நாட்டுப் பொறிமுறைகளின் மூலம் நல்லிணக்கத்தை நிவர்த்தி செய்வதில் உறுதியாக இருப்பதாக சர்வதேச அரங்குகள் உட்பட பல தளங்களில் உறுதியாகக் கூறப்பட்ட இலங்கையின் கொள்ளைக்கு இணங்க இந்த விஜயம் அமைந்துள்ளது. (நி)





# 74 ஆவது பிறந்த நாளை கொண்டாடும் ஜனாதிபதி

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிர மசிங்க நேற்று தனது 74 ஆவது பிறந்த நாளை கொண்டாடினார். 1949 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதி பிறந்த ஜனாதிபதி ரணில், கொழும்பு றோயல் கல்லூரி, கொழும்பு பல்கலைக்கழகம் மற்றும் இலங்கை சட்டக்கல் லூரி என்பவற்றில் தனது கல்வியைத் தொடர்ந்திருந்தார்.

சட்டத்தரணியாக தனது தொழில் வாழ்க்கையை ஆரம் பித்த ரணில் 1977 ஆம் ஆண்டு பியகம தொகுதியில் போட்டியிட்டு முதல் தடவையாக பாராளுமன்ற உறுப்பினராக தெரிவானார்.



நாட்டின் எட்டாவது நிறை வேற்று அதிகார ஜனாதிபதியாக கடமையாற்றி வரும் ரணில் விக்கிரமசிங்க, இதற்கு முன்னர் ஆறுதடவைகள் பிரதமராக பதவி வகித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு சோதனை நடவடிக்கைகள் ஆரம்பம்

(கொழும்பு)

பண்டிகை காலத்தை முன்னிட்டு, நுகர்வோர் விவகார அதிகார சபையினர், நாடளாவிய ரீதியில் சோதனை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர்.

இதற்கமைய, அனைத்து மாவட்டங்களிலும் உள்ள பிரதான மொத்த மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள், களஞ்சியங்கள் என்பன சோதனைக்கு உட்படுத்தப்படுவதாக அந்த அதிகார சபை தெரிவித்துள்ளது.

அத்துடன், நடமாடும் வர்த்தகர்களையும் மலிவு விற்பனை சந்தைகளையும் சோதனைக்கு உட்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுகிறது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீரமாகாளி அம்மன் தேவஸ்தானம்

## பங்குனி குளிர்த்தி வெள்ளிரத மஞ்சள் பால்குட பவனி தீ மிதிப்பு உற்சவம்

*26,27/03/2023 ஞாயிறு, திங்கட்கிழமைகளில்...*

- 26/03/2023 ஞாயிற்றுக்கிழமை வெள்ளிரத மஞ்சள் பால்குட பவனி அதிகாலை 4.45 மணிக்கு வசந்தமண்டப பூஜை
- அதிகாலை 5 மணிக்கு அம்பாள் வெள்ளிரதத்தில் கிராமபிரவேசம் கொள்ளல்.

**கிராம பிரவேச வீதிகள்**

ஆலயத்தில் இருந்து புறப்பட்டு வைமன்வீதி நாவலர்வீதி ஆனைப்பந்தி பருத்தித்துறை வீதி அம்மன் வீதி பலாலிவீதி ஆலடிச் சந்தி பழம்றோட் அரசடி வீதி நல்லூர் சிவன் கோவில் முன்வீதி செட்டித்தெரு பாப்பையாகடைச் சந்தி நாவலர் வீதி கைலாச பிள்ளையார் கோவில் கோவில் வீதி வழியாக பருத்தித்துறை வீதியை அடைந்து நல்லூர் சிவன்கோவில் பின் வீதி வழியாக மீண்டும் ஆலயத்தை வந்தடைதல்

❐ *பிராயச்சித்த அபிஷேகம் பகல் 10 மணி*

**குறிப்பு-** பால்குட பவனியில் பங்குகொள்ளும் அடியவர்கள் தங்களுக்கு அருகில் இருக்கும் ஆலயங்களில் இருந்து மஞ்சள் பால்குடத்துடன் அம்பாளின் வெள்ளி ரத பவனியில் இணைந்து கொள்ளமுடியும் அல்லது வழமை போன்று கைலாச பிள்ளையார் ஆலயத்தில் இருந்தும் இணைந்து கொள்ளலாம். அத்தோடு பிராயச்சித்த அபிஷேகத்திற்குரிய பால், தயிர், இளநீர் போன்ற அபிஷேகத் திரவியங்களை வழங்கி அப்பாளின் திருவருள் பெறுவீர்களாக

- ந.ப 12.30 மணிக்கு அன்னதானம்

## மஹா தீ மிதிப்பு உற்சவம் 27/03/2023 திங்கட்கிழமை

- காலை 7.00 மணிமுதல் வலுந்து பானை ஏற்றி பொங்கல் ஆரம்பமும் தீ மூட்டலும்
- பி.ப 5.30 மணிக்கு வசந்தமண்டப பூஜை
- பி.ப 6.00 மணிக்கு தீ மிதிப்பு

**குறிப்பு** - குளிர்த்தி பொங்கலில் பங்குகொள்ள விரும்புகின்ற அடியவர்கள் பொங்கலுக்குரிய பொருட்களை தாமே எடுத்து வந்து காலை 7.00 மணி தொடக்கம் மாலை 4.00மணிவரை பொங்கல் வழிபாட்டில் ஈடுபடலாம்.

தெளிவே என் சிந்தனை (C-6230)

இங்ஙனம்
கௌரவ கலாநிதி இராஜ ஸ்ரீ சிவ.கமல்ராஜ் குருக்கள்
முதன்மை பிரதம குருவும் - ஆதீனகர்த்தாவும்
(மேற்படி தேவஸ்தானம்)

# இந்தியாவுக்கு 121 மில்லியன் டொலர் வழங்கிய இலங்கை

(கொழும்பு)

சர்வதேசநாணய நிதியத்திடம் இருந்து பெறப்பட்ட கடனில் ஒருபகுதி இந்தியாவிடம் இருந்துபெற்ற கடனை அடைக்க பயன்படுத்தப்பட்டதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

இந்தியகடன் திட்டத்தின் மூலம் பெறப்பட்ட கடன்தொகையில் 121 மில்லியன் அமெரிக்க டொலர்கள் தற்போது செலுத்தப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித்சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.(ம-7.9)


Since 1963
**SATHAPONS**
மாலிசந்தி - அல்வாய்
புதிய வகுப்புக்கள்
தரம் 9 - 10 - 11
ஆரம்பம் : 27.03.2023
மாலை 3.00 மணி
அனுமதிகள் இன்றுமுதல் பெற்றுக்கொள்ளலாம்.
077 309 5176, 077 925 0105, 021 226 3206
(C-6229)



**வேலையாட்கள் தேவை**
ஏற்கனவே பெண் பிள்ளைகள் வேலை செய்கின்ற மில் ஒன்றிற்கு வேலை தெரிந்த அல்லது பழகி வேலை செய்யக்கூடியவர் உடன் தேவை.
சம்பளம் : 1,800/= இற்கு மேல்
077 936 1356
நெல்லியடி (C-6228)




# புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலய பரிபாலன சபை



## வர்த்தக நிலையங்களுக்கான ஏலம் விடுதல்

கரைச்சி புளியம்பொக்கணை நாகதம்பிரான் ஆலயத்தின் வருடாந்த பொங்கல் உற்சவம் எதிர்வரும் 05.04.2023 ஆம் திகதி நடைபெறவுள்ளது. பொங்கல் உற்சவ காலங்களில் வியாபாரம் செய்கின்ற வர்த்தகர்களுக்கான **'கடை ஏலம் விடுதல்'** எதிர்வரும் 26.03.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு ஆலய முன்றலில் இடம்பெறும் என்பதை வியாபாரம் செய்ய ஆர்வமுள்ள வர்த்தகர்களுக்கு அறியத் தருகின்றோம்.

**குறிப்பு**
- ஏலத்தின் போது முழுத்தொகையும் செலுத்தப்படல் வேண்டும்.
- பொலித்தீன் தடைசெய்யப்பட்டுள்ளது.

ஆலய பரிபாலன சபை
கரைச்சி புளியம்பொக்கணை
நாகதம்பிரான் ஆலயம்

(C-6227)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2792

**சப்திகா**

ஒயின் சாப்புக்கு போன ஆனும் பிறந்த வீட்டுக்கு போன பெண்ணும்



புலம்பாம திரும்பி வந்ததா சரித்திரம் இல்லை

**டியூறன்**

ஆசிரியர்: கல்யாணத்தப்போ பொண்ணு மாப்பிள்ளை கைகளை ஏன் சேர்த்து வைக்கிறாங்கன்னு தெரியுமா முருகேசா?



அது பாக்ஸிங் பார்முலா சார். அதுல மொதல்ல கை கொடுக்கச் சொல்வாங்க

**நகோமி**

Childhood pics of




**செல்வினி**

இப்படி ஒரு மாப்பிள்ளை எங்க தேடினாலும் உங்க பொண்ணுக்கு கிடைக்காது அப்படியா?




ஆமா நாலஞ்சு வருஷமா பொலிஸ்காரங்க தேடியே கிடைக்கலனா பாத்துக்குங்க

**பாலன்**

பஸ்ல கண்டக்டர் மீதி சில்லறைய அப்புறம் தர்றேனு சொன்ன உடனேயே



நமக்குள் ஒரு வடிவேலு புகுந்து விடுகிறார்

**டிபிஷன்**

நாம கழட்டி விட்டாலும் நமக்காக காத்திருப்பது



நம்ம செருப்பு தான். ஆனா அதையும் சில பேர் களவாண்டுட்டு போயிடுறாங்க

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கருகம்பனை கவுணாவத்தை நரசிங்க வைரவர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று சிறப்பாக நடைபெற்றது.

# மணற்காட்டில் மேடையேறுகிறது திருப்பாடுகளின் காட்சி

(யாழ்ப்பாணம்)

மணற்காடு புனித அந்தோனியார் ஆலய பங்கு மக்கள் பெருமையுடன் வழங்கும் கிறிஸ்துவின் பாடுகள் மரணம் உயிர்ப்பை சித்தரிக்கும் தவக் கால ஆற்றுகை பலிக்களம் திருப்பாடுகளின் காட்சியானது நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 6.45 மணியளவில் மணற்காடு புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெறவுள்ளது.

இந்தத் திருப்பாடுகளின் காட்சி மணற்காடு மண்ணிலே முதல் முறையாக மேடை ஏறுகிறது.

பங்குத்தந்தை அருட்பணி யோன் குரூஸ் அடிகளாரின் வழிகாட்டலில், அருட்பணி மரிய சேவியர் அடிகளாரின் எழுத்துருவில் உருவான பலிக்களம் திருப்பாடுகளின் காட்சி அன்று யூலியஸினால் நெறியாள்கை செய்யப்படுகிறது. (4-6-104)

# விளக்கமறியலில் இருந்த நான்கு இந்திய மீனவர்கள் விடுதலை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கர்ரைநகர் கடற்பரப்பில் கடந்த 12 ஆம் திகதி எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நான்கு இந்திய மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

குறித்த மீனவர்களின் வழக்கு நேற்று ஊர்காவற்றுறை நீதிமன்றில் எடுத்துக்கொள்ளப்பட்டது.

இதன்போது நான்கு மீனவர்களை நிபந்தனையுடன் நீதிமன்று விடுவித்ததுடன் படகு பறிமுதல் செய்யப்படுவதாக ஊர்காற்றுறை நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. (4-6)



யாழ்.சங்குவேலி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை விளையாட்டு மைதானமானது பயன்படுத்த முடியாது காணப்பட்டதையடுத்து பாடசாலை அதிபரின் வேண்டுகோளுக்கிணங்க பூமணி அம்மா அறக்கட்டளை ஸ்தாபகர் வி.செல்வராசாவின் ஒரு இலட்சத்து 32 ஆயிரம் ரூபாய் நிதியில் மைதானம் புனரமைக்கப்பட்டு நேற்று முன்தினம் பாடசாலை சமூகத்திடம் கையளிக்கப்பட்டது.

## கடலட்டை பண்ணை வழக்கு

# மக்களின் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட வேண்டும்

## நீதிவான் உத்தரவு

(நெளுக்குளம்)

கிளிநொச்சி கிராஞ்சி கடலட்டை பண்ணை அமைப்பதற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் மக்களின் முறைப்பாடுகளை விசாரிக்க வேண்டும் என்று வவுனியா மேல் நீதிமன்றால் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் வழக்கு தவணையிடப்பட்டது.

கிளிநொச்சி மாவட்டம் கிராஞ்சி பகுதியில் அமைக்கப்பட்டு வரும் கடலட்டை பண்ணைக்கு அப்பகுதி மக்கள் எதிர்ப்பு தெரிவித்து வருவதுடன் குறித்த விடயம் தொடர்பாக வவுனியா மேல் நீதிமன்றில் வழக்கு ஒன்றினையும் தாக்கல் செய்திருந்தனர்.

குறித்த வழக்கு நேற்று முன்தினம் எடுத்துக் கொள்ளப்பட்ட நிலையில் மக்களின் முறைப்பாடுகள் விசாரிக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்ட நீதிவான். எதிர்வரும் ஐந்தாம் மாதத்திற்கு வழக்கினை தவணையிட்டுள்ளார். (4-6-299)

## யாழ்ப்பாணக் கல்லூரியின்

# ஆண்டு நிறைவை முன்னிட்டு ஈருருளிப் பவனி



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்லூரியின் 200 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு, கல்லூரியின் நிர்வாகத்தால் பல்வேறு நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் நேற்று கல்லூரி நிர்வாகத்தால் துவிச்சக்கர வண்டிப் பவனி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இந்த பவனியானது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு முன்பாக ஆரம்பமாகி உடுவில் மகளிர் கல்லூரி நோக்கி சென்றது.

பின்னர் அங்கிருந்து மானிப்பாய் கிரீன் ஞாபகார்த்த மருத்துவமனையை வந்தடைந்து அங்கு மரக்கன்று நாட்டி வைக்கப்பட்டது.

பின்னர் அங்கிருந்து புறப்பட்ட குறித்த பவனியானது சங்கானை ஊடாக சித்தங்கேணியை வந்தடைந்து, இறுதியாக யாழ்ப்பாணக் கல்லூரியை வந்தடைந்தது. இந்த பேரணியானது கல்லூரியின் அதிபர் ருசிரா குலசிங்கம் தலைமையில் நடைபெற்றது. (4-6-104)

# இராசிபலன்

25.03.2023
பங்குனி 11, சனிக்கிழமை
சதுர்த்தி முன்னிரவு 8.01 மணிவரை
பரணி பிற்பகல்- 4.36 மணிவரை

சுபநேரம் -3.15-4.45 மணிவரை
இராகுகாலம்-9.15-10.45 மணிவரை
சக்தி கணபதி சதுர்த்தி விரதம்
கார்த்திகை விரதம், சித்தாமிர்தம்

சந்திராஷ்டமம் - அத்தம், சித்திரை

வளவன்

**மேஷம்** முன்னேற்றம் பெற பெரிதும் பாடுபடுவீர்கள், போசன சுகமுண்டு, கௌரவமானவர்களின் சந்திப்புக்கள் இடம்பெறலாம், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கடகம்** தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், செய் தொழிலில் முன்னேற்றம் பெற முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள்.

**துலாம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**மகரம்** மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்பால் பரவசமடைவீர்கள், சுபவிரயங்கள் கூடும்.

**ரிஷபம்** உறவினர் நலன் கருதிய சுபவிரயங்கள் ஏற்படலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டும் சூழ்நிலை உருவாகும், உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை உருவாகும்.

**சிம்மம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, புதிய முயற்சிகள் கைகூடும்.

**விருச்சிகம்** மனதில் நினைத்த புதிய திட்டங்களை நிறைவேற்றுவீர்கள், மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் குடிகொள்ளும், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

**கும்பம்** இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியமான நாள்.

**மிதுனம்** குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், குடும்பத்தினரிடையே விட்டுக் கொடுத்து செல்வது நல்லது, எடுத்த காரியங்களை நிறைவேற்றுவதில் சில இ[illegible]

**தனுசு** தொழில் வியாபாரம் சம்பந்தமாக எடுத்த முயற்சிகள் கைகூடும், தாழ்ந்த சுபாவமுண்டு, புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிறர் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மீனம்** உங்களின் கருத்துக்களை பலரும் ஏற்று நடப்பர், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், பணப்புழக்கம் அதிகரிக்கும் வாய்ப்புண்டு, கௌரவமான நாள்.

நற்குணம் ஒன்றே மிகுந்த அழகையும் மரியாதையையும் உண்டாக்கும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

### உள்ளூராட்சி சபைகளின்

# புதிய வட்டார எல்லை நிர்ணய அறிக்கை இம்மாத இறுதியில் சமர்ப்பிப்பு

## கலாநிதி தவலிங்கம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தற்போதைய உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் முறையின்பிரகாரம், தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை மற்றும் தெரிந்தனுப்பப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 50% இற்கும் மேற்பட்ட தொகையினால் குறைப்பதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை இம் மாத இறுதியில் சமர்ப்பிக்கப்படும் என்று அக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான கலாநிதி க.தவலிங்கம் தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில்,

உள்ளூர் அதிகார சபைகளின் மொத்த உறுப்பினர்களின் எண்ணிக்கையான 8356 ஐ 4700 வரையில் குறைப்பதற்கும் வட்டாரங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 5092 இலிருந்து 2900 வரையில் குறைப்பதற்கும்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், யாழ் மாவட்டத்தில் வட்டாரங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை 243 லிருந்து 147 ஆகவும், கிளிநொச்சி மாவட்டத்தில் 40 லிருந்து 27 ஆகவும், மன்னாரில் 54 லிருந்து 36 ஆகவும், வவுனியாவில் 63 லிருந்து 40 ஆகவும், முல்லைத்தீவு மாவட்டத்தில் 41 லிருந்து 29 ஆகவும் குறைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரையில் வட்டாரங்களின் மூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை பின்வருமாறு அமையும். யாழ். மாநகர சபை-16 உறுப்பினர்கள், வல்வெட்டித்துறை நகர சபை-5 உறுப்பினர்கள், பருத்தித்துறைநகர சபை-5 உறுப்பினர்கள், சாவகச்சேரி நகர சபை-6 உறுப்பினர்கள், காரைநகர் பிரதேச சபை-3 உறுப்பினர்கள், ஊர்காவற்றுறை பிரதேச சபை-5 உறுப்பினர்கள், நெடுந்தீவு பிரதேச சபை-5 உறுப்பினர்கள்,வேலணை பிரதேச சபை-6 உறுப்பினர்கள், வலிகாமம் மேற்கு பிரதேச சபை-10 உறுப்பினர்கள், வலிகாமம் வடக்கு பிரதேச சபை-12 உறுப்பினர்கள், வலிகாமம் தென் மேற்கு பிரதேச சபை-11 உறுப்பினர்கள், வலிகாமம் தெற்கு பிரதேச சபை-11 உறுப்பினர்கள், வலிகாமம் கிழக்கு பிரதேச சபை-15 உறுப்பினர்கள், வடமாராட்சி தென் மேற்கு பிரதேச சபை-11 உறுப்பினர்கள், பருத்தித்துறை பிரதேச சபை-8 உறுப்பினர்கள், சாவகச்சேரி பிரதேச சபை-10 உறுப்பினர்கள், நல்லூர் பிரதேச சபை-8 உறுப்பினர்கள். (4)

# ஒரு சிலரின் பொறுப்பற்ற செயலால் குருவிக்காட்டின் உயிர்ப்பல்வகைமை பாதிப்பு

### சுற்றாடல் அதிகார சபையின் மாகாண பணிப்பாளர்

(சாவகச்சேரி)

ஒரு சிலரின் பொறுப்பற்ற செயற்பாடு காரணமாக தென்மராட்சி-சரசாலை குருவிக்காட்டின் உயிர்ப்பல்வகைமை பாதிக்கப்படுவதாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் வடக்கு மாகாண பணிப்பாளர் து.சுபோகரன் தெரிவித்துள்ளார்.

கடந்த திங்கட்கிழமை வனதினத்தை முன்னிட்டு வனவள திணைக்களத்தால் குருவிக்காட்டு சூழலில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த சிரமதானத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே மேற்படி அவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்து தெரிவிக்கையில்,



சரசாலை குருவிக்காடு இயற்கையான ஓர் பறவைகள் சரணாலயம்.

இங்குள்ள பறவைகள் மற்றும் தாவரங்கள் உயிர்ப்பல்வகைமை கொண்டவை.

குருவிக்காட்டு சூழல் மனிதர்களின் வாழ்வாதாரத்திற்கு உகந்த இடமாகவும் காணப்படுகின்றது.

இப் பிரதேச மக்கள் மாத்திரமன்றி அனைவரும் குருவிக்காட்டில் கரிசனை கொள்ள வேண்டும்.

இங்கு ஒரு சிலர் கழிவுகளை கொட்டி விட்டுச் செல்கின்றனர்.

இதனால் இப்பிரதேசத்தில் உள்ள தாவர மற்றும் விலங்குகளின் உயிர்ப்பல்வகைமை பாதிக்கப்படுகின்றது.

வனதினத்தை முன்னிட்டு இங்கு சிரமதானப் பணி ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது. பிரதேச மக்கள் தொடர்ச்சியாக குருவிக்காட்டு சூழலை பராமரித்து வளம் நிறைந்த ஆரோக்கியமான இடமாக இதனை மாற்றியமைக்க வேண்டும் எனத் தெரிவித்தார். (4-30)

# சங்கத்தானையில் வீடொன்றில் நகை, பணம் கொள்ளை

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சங்கத்தானை இத்தியடிப் பிள்ளையார் ஆலயத்தை அண்மித்த வீடொன்றில் கடந்த புதன்கிழமை பிற்பகல் பணம் மற்றும் நகை ஆகியன திருட்டுப் போயிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீட்டில் ஆட்கள் இல்லாத வேளையில் சமையல் அறையின் புகைக்கூடு வழியாக உள்நுழைந்த திருடன் வீட்டில் இருந்த இரண்டு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் பெறுமதியான ஒன்றரைப் பவுண் நகை மற்றும் 75 ஆயிரம் ரூபாய் பணம் ஆகியவற்றை திருடிச் சென்றிருப்பதாக முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கிடைக்கப் பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு சாவகச்சேரிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (4-6-30)

# சூட்சுமமான முறையில் கஞ்சா கடத்தியவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை பகுதியில் முச்சக்கரவண்டியில் சூட்சுமமான முறையில் கஞ்சா கடத்திய நபர் ஒருவர் வெள்ளிக்கிழமை காலை சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

முச்சக்கரவண்டி ஒன்றில் கஞ்சா கடத்தப்படுவதாக சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப் பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் முச்சக்கரவண்டியின் இசைக்கருவியில் மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட ஒரு கிலோ 800 கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

இதன்போது மீசாலை கிழக்குப் பகுதியைச் சேர்ந்த 30 வயதான இளைஞன் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைதான சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை சாவகச்சேரிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (4-30)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தால் நடத்தப்படும் மனிதவள முகாமைத்துவம் (Human Resource Management) குறுகிய காலக் கற்கைநெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணப்பத்தினைப் பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாணப் பிராந் திய நிலையத்தால் நடத்தப்படும் வேலை வாய்ப்புக்கான ஆங்கிலம் (English for Employment) 5 மாத கற்கைநெறிக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பிக்க விரும்புபவர்கள் எதிர்வரும் 28 ஆம் திகதிக்கு முன்னர் யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் விண்ணபத்தினைப் பெற்று அல்லது https: //ou.ac.lk/engforempol/ என்ற இணையத் தளத் தின் ஊடாக விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாணப் பிராந்திய நிலைய உதவிப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (4)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பவியல் கற்கைநெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இக்கற்கை நெறிகள் மாவட்ட அலுவலகம் மற்றும் மானிப்பாய் பயிற்சி நிலையங்களில் நடைபெறும்.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 2023.04.21

க.பொ.த (சா/த) பரீட்சையில் ஏதேனும் 3 பாடங்களில் திறமை சித்தியுடன் கணிதம்,ஆங்கிலம் உள்ளடங்கலாக 6 பாடங்களில் சித்தியுடன் க.பொ.த(உ/த)பரீட்சையில் 2 பாடங்களில் சித்தியும் இருக்க வேண்டும்.

இக்கற்கைநெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி,பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் மற்றும் பயில விரும்பும் பயிற்சி நிலையம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44 சோமசுந்தரம் அவனியூ, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் ஆர்.திருமுருகன் அறிவித்துள்ளார். (4)

• • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • • •

(யாழ்ப்பாணம்)

தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையின் கீழ் கணினி வன்பொருள் தொழில்நுட்பவியலாளர் கற்கை நெறிக்கான சான்றிதழைப் பெறுவதற்கான பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவுத் திகதியன்று 16-25 வயதிற்கு உட்பட்டவராக இருக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத் திகதி 2023.04.21

க.பொ.த. (சா/த) பரீட்சையில் தோற்றியிருக்க வேண்டும்.

இக்கற்கை நெறிகளுக்காக விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் தமது முழுப்பெயர், முகவரி, பிறந்த திகதி, தேசிய அடையாள அட்டை இலக்கம், கல்வித் தகைமைகள், தொலைபேசி இலக்கம் என்பவற்றைக் குறிப்பிட்டுச் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தை மாவட்ட முகாமையாளர், தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபை, மாவட்ட அலுவலகம், இல.44,சோமசுந்தரம் அவனியு, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2383 அல்லது 071 455 3772 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு தொழிற்பயிற்சி அதிகார சபையின் யாழ்.மாவட்ட முகாமையாளர் ஆர்.திருமுருகன் அறிவித்துள்ளார். (4)

# சாவகச்சேரியில் கஞ்சா பீடி, ஹெரோயினுடன் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதி மற்றும் மீசாலைப் பகுதிகளில் கஞ்சா பீடி மற்றும் ஹெரோயின் போதைப்பொருளுடன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை பிற்பகல் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரிப் பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் குறித்த கைது நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது ஒரு நபரிடம் 28 மி.கிராம் ஹெரோயினும் மற்றைய நபரிடம் இருந்து கஞ்சா பீடியும் கைப்பற்றப்பட்டிருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (4-30)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாயைத் தேடித் தவித்த பிள்ளைகள் சடலங்களாக மீட்பு

### பதுளையில் துயரம்

(பதுளை)

பதுளை ஹாலி-எல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட போகொட பகுதியில் நீரில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயிருந்த இரு சிறுவர்களின் சடலங்களும் நேற்று முற்பகல் மீட்கப்பட்டுள்ளதாக ஹாலி-எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

10 வயது அண்ணனும், 8 வயது தங்கையுமே இவ்வாறு சடலங்களாக மீட்கப்பட்டுள்ளனர்.

போகொட கொட்டியாமலுவ பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை கடும் மழை பெய்த போது தமது வீட்டில் இருந்து, நீரோட்டப் பகுதிக்கு அப்பால் உள்ள வீடொன்றுக்கு தாய் சென்றிருந்ததால் அவரை அழைத்து வருவதற்காக சென்ற வேளையிலேயே குறித்த சிறுவர்கள் இவ்வனர்த்தத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

நீரோட்டப்பகுதியை கடப்பதற்கு முற்பட்டவேளை, நீர்வரத்து அதிகரித்ததால் அவர்கள் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இரண்டு சிறுவர்களும் போகொட வித்தியாலயத்தில் தரம் ஐந்து மற்றும் தரம் இரண்டில் கல்வி கற்கும் சகோதரர்கள் ஆவர்.

சிறுவர்களின் தந்தை கொழும் பில் தொழில் புரிந்து வருவதுடன் குறித்த சிறுவர்கள் இருவரும் தாயாரின் அரவணைப்பில் வாழ்ந்து வந்துள்ளனர். (நி)

## செயன்முறை பரீட்சைகள் 28 ஆம் திகதி ஆரம்பம்

(கொழும்பு)

2022 கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கான செயன்முறைப் பரீட்சைகளை எதிர்வரும் 28 ஆம் திகதி முதல் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செயன்முறை பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

அனுமதி அட்டைகளை பரீட்சைகள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும் எனவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மனைப் பொருளியல், பரத நாட்டியம், கீழைத்தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், மேலைத்தேய சங்கீதம் மற்றும் மும்மொழிகளுக்குமான நாடகமும் அரங்கியலும் பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகள் நடத்தப்படவுள்ளன.

ஒவ்வொரு செயன்முறைப் பரீட்சார்த்திக்கும், பரீட்சைக்குத் தோற்ற வேண்டிய திகதி, நேரம், இடம் என்பன அனுமதி அட்டையில் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவற்றை எக்காரணம் கொண்டும் மாற்ற முடியாது எனவும் பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

ஏனைய பாடங்களுக்கான செயன்முறைப் பரீட்சைகளை எதிர்காலத்தில் நடத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி)

## உள்ளூராட்சி, மாகாணசபைத் தேர்தலை நடத்த இலங்கை அரசிற்கு அழுத்தம் கொடுக்க வேண்டும்

### மனோ எம்.பி சர்வதேசத்திடம் கோரிக்கை

(கொழும்பு)

உள்ளூராட்சி சபைத் தேர்தல், மாகாண சபைத் தேர்தல் இரண்டும் நடத்தப்பட இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். உள்ளூராட்சிசபைத் தேர்தல் எவ்வளவு முக்கியமோ, அதேயளவு ஒன்பது மாகாண சபைகளுக்கான தேர்தலும் முக்கியம் என்பது எங்களது உறுதியான நிலைப்பாடு என தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர் மனோகணேசன் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸவின் ஏற்பாட்டில் எதிரணி எம்.பிக்கள், இலங்கையிலிருந்து செயற்படும் அமெரிக்க, இந்தியா, பிரிட்டன், ஜப்பான், கனடா, பிரான்ஸ் உள்ளிட்ட 12 நாடுகளின் தூதரகப் பிரதிநிதிகளைச் சந்தித்து உரையாடிய போது மனோ எம்.பி. இந்தக் கருத்துகளைக் கூறினார். (நி)

## தமிழ் மக்களுக்கு சுதந்திரமில்லை; ஐ.எம்.எப் கவனம் செலுத்த வேண்டும்

### சிறீதரன் எம்.பி தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழ் மக்கள் தற்பொழுதும் நிம்மதியாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய சூழல் இல்லை எனவும் இந்த விடயத்தில் நாணய நிதியம் கவனம் செலுத்த வேண்டும் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய அமர்வில் உரையாற்றிய சிவஞானம் சிறீதரன், தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தீர்வு தொடர்பில் நாணய நிதியம் இலங்கை அரசாங்கத்திடம் நிபந்தனை விதிக்க வேண்டும் என்று தெரிவித்தார்.

அத்தடன், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு அரசியல் ரீதியான தீர்வை முன்வைப்பதற்கு இலங்கையில் எந்தவொரு தலைவரும் தயாராக இல்லை.

வரிகளை விதிப்பதனால் மாத்திரம் நாட்டின் பொருளாதாரம் வளர்ச்சி அடையாது என்றும் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். (நி)


முருகுப்பிள்ளை நவரட்ணசாமி

தொண்டைமானாறு



நீச்சல் அகவை 69 இல்

கால்பதிக்கும் உன் புகழுக்கு

சிரம் தாழ்த்தி வணக்கம்.

நண்பர் குழாம்,

வினோபா நூலகம்,

வினோபா நகர்,

கச்சாய்.

(சி-6219)


## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 140 | 120 | 160 |
| உருளைக்கிழங்கு | 150 | 150 | 150 |
| பச்சைமிளகாய் | 250 | 250 | 350 |
| தக்காளி | 120 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 180 | 180 | 200 |
| கோவா | 80 | 100 | 100 |
| கரட் | 180 | 150 | 200 |
| பூசணி | 80 | 80 | 60 |
| புடோல் | 140 | 140 | 150 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 250 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 120 |
| பாகற்காய் | 400 | 450 | 450 |
| வெண்டக்காய் | 280 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 150 |
| பயற்றங்காய் | 160 | 120 | 120 |
| லீக்ஸ் | 240 | 250 | 180 |
| பீற்றூட் | 140 | 180 | 150 |
| கறிமிளகாய் | 250 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 1800 | 1200 | 1200 |
| போஞ்சி | 250 | 280 | 280 |
| கத்தரிதம்புள்ள | 100 | 100 | 160 |
| கீரை - 1 பிடி | 100 | 100 | 100 |
| தேசிக்காய் | 200 | 200 | 200 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 350 | 300 | 350 |
| வெங்காயப்பூ | 120 | 120 | 300 |
| முள்ளங்கி | 100 | 100 | 20 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 50 |
| வல்லாரை | 25 | 50 | 20 |
| ஈரப்பலா | 140 | 120 | 120 |


## வளவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்

வடமாகாண சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசங்களின் சம்மேளனத்திற்கு குறுகிய அவசர கருத்திட்டத்திற்கான வடமாகாணத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட சி.க.கூ சங்கங்களை ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான வளவாளர் பதவிக்கு விண்ணப்பம் கோரல்.

**விண்ணப்பதாரர் கொண்டிருக்க வேண்டிய பொதுவான தகைமைகள்**

- வடமாகாணத்தில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
- வடமாகாணத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட அனைத்து பகுதிகளுக்கும் நேரடி விஜயம் மேற்கொண்டு ஆய்வு செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- விண்ணப்பதாரர் ஓய்வு பெற்ற கூட்டுறவுத் திணைக்கள உதவி ஆணையாளர் அல்லது கூட்டுறவு அபிவிருத்தி உத்தியோகத்தராக இருத்தல் வேண்டும்.
- ஆய்வறிக்கையானது ஆங்கிலம் மற்றும் தமிழில் தனியாகவும் கூட்டாகவும் சமர்ப்பிக்கக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமையுடையவர்கள் கீழுள்ள எமது அலுவலக முகவரிக்கு 01.04.2023க்கு முன்னர் தபாலில் அல்லது மின்அஞ்சலில் அனுப்பி வைக்க வேண்டும்.

முகவரி
தலைவர்,
வடமாகாண சி.க.கூ.ச.ச.சம்மேளனம்,
2ம் மாடி,மாவட்டக் கூட்டுறவுச் சபை,
A9 வீதி,டிப்போ சந்தி அருகாமை,
கிளிநொச்சி.

தொலைபேசி இலக்கம் 077 867 7711
மின்னஞ்சல் federation.tccs@yahoo.com

(C-6224)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 1

காவியத் தொடர் 136





மூன்று வீரர்களை ஏக காலத்தில் எதிர்த்துப் புரட்டிக் கீழே தள்ளிய வாலிபனுடைய வீரச் செயலைப் பற்றிய வியப்பு இன்னும் பழுவேட்டரையரின் மனத்தை விட்டகலவில்லை. இத்தகைய வீரனை நாம் நமது காவற்படையில் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்னும் ஆசை அவருக்கு அதிகமாயிற்று.

எனவே, அவர் சாந்தமான குரலில், "பொறு! தம்பி! பொறு! அப்படியெல்லாம் இவர்கள் செய்திருப்பார்கள் என்று தோன்றவில்லை! இவர்களை விசாரித்துப் பார்க்கிறேன்!" என்றார்.

"நான் கோருவதும் அதுதான்! இவர்களை விசாரியுங்கள் விசாரித்து நீதி வழங்குங்கள்! என்னுடைய உடையும் உடைமையும் என்னிடம் திரும்பி வருவதற்கு ஏற்பாடு செய்யுங்கள்!" என்றான் வல்லவரையன்.

"அடே! அந்தப் பிள்ளையை விட்டு விட்டு இப்படி வாருங்கள்! நான் சொன்னது என்ன? நீங்கள் செய்தது என்ன? இவன் மீது ஏன் கை வைத்தீர்கள்?" என்று கோபமாகக் கேட்டார் கோட்டைத் தளபதி.

"எஜமானே! தாங்கள் சொன்னது சொன்னபடியே செய்தோம். இவரை எண்ணெய் முழுக்காட்டிப் புதிய ஆடைகளையும் ஆபரணங்களையும் அணிவித்தோம் அறுசுவை உண்டி அளித்தோம். சித்திர மண்டபத்துக்கும் அழைத்து வந்தோம்! இவர் சிறிது நேரம் சித்திர மண்டபத்தில் உள்ள சித்திரங்களைப் பார்த்துக் கொண்டிருந்தார். திடீரென்று நினைத்துக் கொண்டு இவருடைய பழைய உடைகளைக் கேட்டார். உடனே எங்களைத் தாக்கவும் ஆரம்பித்தார்!" என்றான் அவ்வீரர்களில் ஒருவன்.

"ஒரு சிறு பிள்ளையிடமா மூன்று தடியர்கள் அடிபட்டு விழுந்தீர்கள்?" என்று கூறி இரத்தக் கனல் வீச விழித்துப் பார்த்தார்.

"எஜமான்! அரண்மனை விருந்தாளியாயிற்றே என்று யோசித்தோம். இப்போது சற்று அனுமதி கொடுங்கள்; இவனை உடனே வேலை தீர்த்துவிடுகிறோம்."

"போதும் உங்கள் வீரப் பிரதாபம்! நிறுத்துங்கள்! தம்பி! நீ என்ன சொல்லுகிறாய்?"

"இவர்களுக்கு அனுமதி கொடுங்கள் என்றுதான் சொல்கிறேன். எனக்கும் அனுமதி கொடுங்கள். சோழ குலத்துப் பகைவர்களோடு போராடிக் கொஞ்சம் நாள் ஆயிற்று. தோள்கள் தினவெடுக்கின்றன. அரண்மனை விருந்தாளிகளை எப்படி நடத்த வேண்டுமென்று இவர்களுக்கு பாடம் கற்பிக்கின்றேன்!" என்றான் நமது வீரன்.

சின்னப் பழுவேட்டரையர் புன்னகை புரிந்து, "தம்பி! உன் தோள் தினவைத் தீர்த்துக் கொள்வதைச் சோழப் பகைவர்களோடேயே வைத்துக் கொள்! சக்கரவர்த்தி நோய்வாய்ப்பட்டிருக்கும் நிலையில் தஞ்சைக் கோட்டைக்குள் இவ்விதம் சண்டை, சந்தடி ஒன்றும் உதவாது என்று கட்டளை!" என்று சொன்னார்.

"அப்படியானால் என்னுடைய உடைகளையும் உடைமைகளையும் உடனே கொண்டு வந்து கொடுக்கச் சொல்லுங்கள்!"

"எங்கேடா அவை?"

"எஜமான்! தங்கள் கட்டளைப்படி பத்திரப்படுத்தி வைத்திருக்கிறோம்."

"தளபதி! இவர்கள் எப்படிப் புளுகுகிறார்கள், பாருங்கள்! சற்று முன் உடைகளை வெளுக்கப் போட்டிருப்பதாய்ச் சொன்னார்கள். இப்போது தாங்கள் 'பத்திரப்படுத்தி' வைக்கச் சொன்னதாகக் கூறுகிறார்கள்.

(தொடரும்...)

## சிறுவர் அரங்கம்



### சாகாத வரம்



வையாபுரி பட்டினம் என்ற நகரம் கடற்கரை ஓரத்தில் அமைந்திருந்தது.

வையாபுரி பட்டினத்தில் முத்து வியாபாரி மாணிக்கத்தை தெரியாதவர் இருக்க முடியாது.

மாணிக்கத்தின் வீடு அரண்மனையைப் போல் விசாலமாக இருக்கும்.

முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு முத்து, ரத்தினம், வைரம் என்று மூன்று மகன்கள்.

இவர்களில் பெரியவன் முத்து வெளிநாடுகளில் வியாபாரம் செய்து பெரும் பொருள் ஈட்டினான்.

அவன் தம்பி ரத்தினமும் வைரமும் உள்ளூர் வியாபாரத்தைக் கவனித்துக் கொண்டனர்.

முத்து வியாபாரி மாணிக்கத்திற்கு ஒரு நாள் திடீரென்று உடல் நிலை சரியில்லாமல் போனது. தான் இறந்து விடுவோம் என்று தோன்றியது. சொத்துக்கள் அனைத்தையும் உள்ளூரில் இருக்கும் தனது மகன்களிடம் ஒப்படைத்து விட்டு இறந்து போனார்.

பேராசை கொண்ட ரத்தினமும் வைரமும் அப்பாவின் சொத்துக்களை இரண்டாகப் பிரித்துக் கொண்டு அண்ணன் முத்துவை கொலை செய்ய திட்டமிட்டனர்.

ஒரு நாள் அண்ணன் முத்து திரும்பி வந்தான். அவனிடம் சொத்துக்களை மூன்றாக பிரித்துக் கொள்ளலாம் என்று சொன்னார்கள்.

அண்ணனும் தம்பிகள் சொன்னதை நம்பினான். ஆனால் அன்று இரவே முத்துத் தூங்கி கொண்டிருக்கும் போது அவனை அடித்து ஒரு குளத்தில் வீசி எறிந்தனர்.

அடுத்த நாள் அந்த குளக்கரையில இருந்த கோவிலின் எதிரில் படுத்து கிடந்தான் முத்து. ஆனால் அவன் உடம்பில் எந்த விதமான காயமும் இல்லை.

தூங்கி எழுந்த முத்து தனக்கு முன்னால் கடவுள் பிரத்யட்சமாய் தோன்றியிருப்பதைக் கண்டு வணங்கினான். "என்ன நடந்தது?" என்றார் கடவுள். நடந்ததைச் சொன்னான் முத்து.

"இனி உனக்கு எந்த ஆபத்தும் வராது. 400 ஆண்டுகள் வரை நீ வாழ்வாங்கு வாழ்வாய்." என்று வரமளித்து விட்டு கடவுள் மறைந்தார். முத்து வீட்டிற்குத் திரும்பினான் ரத்தினமும் வைரமும் அதிர்ச் சியடைந்தனர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறந்து போனவனின் செருப்புகளுக்குக் காத்திருப்பவன் வெறுங் கால்களுடன் நடக்க வேண்டி வரும். *– டேனிஷ் பழமொழி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மதம் மாற்றும் துரோகத்தை செய்யாதிருமின்

**இலங்கை திருநாட்டில் ஈழத் தமிழினம் அனுபவித்துவரும் அவலங்கள் கொஞ்சமல்ல.**

**தமிழ் இனம் என்பதற்காக இந்த நாட்டின் பேரினவாத ஆட்சியாளர்கள் எங்களுக்கு இழைத்த கொடுமைகள் சொல்லிமாளா.**

**எத்தனையோ வஞ்சிப்புக்களை எங்கள் இனத்தின் மீது பேரினவாதம் கட்டவிழ்த்த போதிலும் நம் தமிழினம் வாழ வேண்டும் என்பதற்காக எங்கள் பிள்ளைகள் செய்த தியாகங்கள் இமயமாய் உயர்ந்து நிற்கின்றன.**

**அந்தத் தியாகம் புனிதமானது. மதபேதமற்றது. தமிழாய் வாழ்ந்து கொண்டிருப்பது.**

**இந்த நிலையில் இப்போது எங்கள் மண்ணில் மதமாற்றுகின்ற குழுக்கள் களமிறங்கி சைவ சமயத்தவர்களை தத்தம் சபைகளுக்கு மாற்றுவதற்காகப் பெரும் பாடுபடுகின்றன.**

**இதற்காக வெளிநாடுகளில் இருந்து ஏகப்பட்ட நிதி அனுப்பி வைக்கப்படுகின்றது.**

**கூலிக்கு அமர்த்தப்படுபவர்கள் வீடு வீடாகச் சென்று மதமாற்றப் பிரசாரம் செய்கின்றனர்.**

**இதற்கும் மேலாக மதமாற்றப் பிரசாரக் கூட்டங்கள் ஏற்பாடாகியுள்ளன.**

**இந்தக் கொடுமை ஏன்? என்பதுதான் புரியவில்லை.**

**தந்தை செல்வநாயகம் ஒரு கிறிஸ்தவர். ஆனால் அவரை தமிழ் மக்கள் தங்கள் அரசியல் தலைவராக ஏற்றுக் கொண்டனர்.**

**அவர் மீது அளவு கடந்த அன்பும் மரியாதையும் கொண்டு அவரை முதன்மைப்படுத்தியவர்கள் சைவ மக்கள்.**

**இப்படியாக சமய பேதம் பார்க்காமல், தங்கள் அரசியல் தலைவராகத் தந்தை செல்வநாயகத்தை ஏற்றுக் கொண்ட சைவ மக்களின் பெருந்தன்மையை குறிப்பிட்ட சில சபைகள் புரிந்து கொள்ளாமல் சைவ மக்களை மதம்மாற்றுகின்ற வேலையில் ஈடுபட்டு வருகின்றன. இது மிகவும் வேதனைக்குரியது.**

**இத்தகைய மதமாற்றச் செயற்பாடுகள் தமிழ் இனத்தின் ஒற்றுமையைக் குலைப்பதற்கானது என்று எண்ணத் தோன்றுகிறது.**

**ஆம், தமிழ் மக்களை மதத்தின் பேரால் பிரித்து அவர்களின் தமிழினப் பற்றை - உணர்வைச் சீரழிக்கின்ற மறைமுக முயற்சியாகவே இது அமைகின்றது.**

**எனவே இத்தகைய இழி செயலை அனைவரும் கடுமையாக எதிர்க்க வேண்டும்.**

**சைவ சமயத்தை அழிப்பதனூடாக தமிழ் மொழியை அழிக்கின்ற இந்த ஈனச் செயலுக்கு யார் துணை போனாலும் அது தமிழினத் துரோகமாகவே அமையும்.**

**எனவே அன்புக்குரிய தமிழ் உறவுகளே! தமிழனாக வாழுகின்ற நம்மைச் சிதைக்கும் மதமாற்றிகளின் வஞ்சகத்தனத்துக்கு யாரும் இரையாகி விடாதீர்கள்.**

**உங்கள் உங்கள் சமயத்தில் இருந்து கொண்டு; இந்த உலகத்துக்கு ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்று சமத்துவம் போதித்த தமிழ் இனத்தின் பெருமையை உணர்ந்து ஒற்றுமையாய் வாழ்வோம்.**

### பூநகரி–கௌதாரிமுனைப் பகுதியில்

# காற்றாலை மூலம் மிகப்பெரிய மின் உற்பத்தி செய்யப்படும்

(கிளிநொச்சி)

பூநகரி கௌதாரிமுனை பகுதியில் காற்றாலை மூலம் மிகப்பெரிய மின் உற்பத்தி செய்யப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

பூநகரி - கௌதாரி முனை பகுதியில் அமைக்கப்படவுள்ள சூரியசக்தி மற்றும் காற்றாலை மின் உற்பத்தி நிலையம் தொடர்பான உயர்மட்ட கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் றூபவதி கேதீஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின் போது பல்வேறு விடயங்கள் பேசப்பட்டன.

கௌதாரி முனை கிராமம் சுற்றுலாவிற்கு பொருத்தமானதாக மாற்றப்படும் எனவும், அங்குள்ள முன்பள்ளி மற்றும் பாடசாலையின் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்தல் மற்றும் ஆசிரியர்களின் திறன்களை அதிகரிக்கும் பயிற்சிகளை வழங்குதல் கவனத்தில் கொள்ளப்பட்டுள்ளது.

பிரதான வீதியை காப்பெற் வீதியாக அமைப்பதற்கும், உள்ளக வீதிகளையும் அபிவிருத்தி செய்து மக்களின் பயன்பாட்டுக்கு கையளிப்பது தொடர்பிலும் இத்திட்டத்தில் உள்வாங்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், சுகாதாரம், வாழ்வாதாரம், தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்தி கொடுப்பதற்கும் இத் திட்டத்தில் பிரதான கவனம் செலுத்தப்படவுள்ளதாகவும் விளக்கமளித்தனர்.

மேலும், குறித்த காற்றாலை மின் உற்பத்தி நிலையம் ஊடாக மிகப் பெரியளவிலான மின்னுற்பத்தி செய்யப்படவுள்ளது எனவும், இதற்கான தொழில்நுட்பங்கள் நவீன முறையில் பயன்படுத்தப் படவுள்ளதால் சூழலுக்கு எவ்வித பாதிப்பினையும் ஏற்படுத்தப்போவதில்லை எனவும் அவர்கள் இதன் போது தெரிவித்தனர்.

மீன் உற்பத்தியில் பாதிப்பு ஏற்படும் என்ற அச்சம் மீனவர்கள் மத்தியில் எழுந்துள்ளது. இந்த நிலையில், அவ்வாறு விஞ்ஞான ரீதியாக நிரூபிக்கப்பட்டால் நட்டஈடுகள் வழங்க நேரிடும் எனவும் இதன்போது குறிப்பிடப்பட்டது. (ம-7,9)

# ஆளுநர் நியதிச்சட்டம் உருவாக்க முடியாது

### நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

மாகாண நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரம் ஆளுநருக்கு கிடையாது சட்டமா அதிபரினால் வடக்கு ஆளுநர் ஜீவன் தியா கராயாவிற்கு எழுத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதாக சட்டமா அதிபர் திணைக்களப் பிரதிநிதி மேன்முறையீட்டு நீதிமன்றில் தெரிவித்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா வடக்கு மாகாண சுற்றுலா அலுவலக நியதிச் சட்டம் மற்றும் வாழ்வாதார முகாமைத்துவ நியதிச் சட்டங்கள் என இரு நியதிச் சட்டங்களை வெளியீடு செய்து வர்த்தமானியில் பிரசுரித்திருந்தார்.

அவ்வாறு ஆளுநரால் நியதிச் சட்ட உருவாக்கம் செய்தமை சட்ட முரணானது என வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் ஊடாக மேன் முறையீட்டு நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,9)

# அழகு கெட்டுவிடும் என்பதால் தாய்ப் பாலூட்டுவதில்லை

### யாழில் சம்பவம்

தனது அழகு கெட்டுவிடும் என தெரிவித்து பிள்ளைக்கு தாய்ப் பாலூட்டாமல் விட்ட இளம் தாயொருவர் தொடர்பான தகவல் வெளியாகியுள்ளது.

வடமராட்சி பகுதியிலுள்ள வைத்தியசாலையொன்றில் இந்த சம்பவம் நடந்தது. இச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

ஒரு வயதுடைய பிள்ளையை வைத்தியசாலை விடுதியில் சிகிச்சைக்காக அனுமதித்த இளம் தாயொருவர், பிள்ளையுடன் தங்கியிருந்துள்ளார்.

அந்த சமயத்தில்பிள்ளை அழும் சமயங்களில், தனது விரலை குழந்தையின் வாயில் வைத்த படியிருந்தார். இதை அவதானித்த தாதியொருவர், தாய்ப் பாலுட்டாமல், ஏன் விரலை வைத்திருக்கிறீர்கள் என வினவியுள்ளார்.

குழந்தைக்கு சில மாதங்கள் மட்டுமே தாய்ப்பாலூட்டியதாகவும், பின்னர் புட்டிப்பால் பருக்கி வருவதாகவும் தெரிவித்த இளம் தாயார், தனது அழகு கெட்டு விடும் என்பதால் தாய்ப் பாலூட்டுவதில்லை என தெரிவித்துள்ளார். (ம-7,9)

# அரசியலமைப்பு பேரவையில் சித்தார்த்தனை இணையுங்கள்

### சபாநாயகரிடம் சஜித் கோரிக்கை

பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனை அரசியலமைப்பு பேரவையில் இணைத்துக் கொள்ளுமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தர்மலிங்கம் சித்தார்த்தனை அரசியலமைப்பு சபையில் இணைத்துக் கொள்ள தமிழ் தேசிய கூட்டமைப்பு பரிந்துரைத்துள்ளதாக அவர் நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அரசியலமைப்பு பேரவையில் தற்போது 9 உறுப்பினர்கள் மாத்திரமே உள்ளதாகவும் எனினும் அதற்கு 10 பேர் தேவை என சஜித் பிரேமதாச சுட்டிக காட்டியுள்ளார். (ம-7,9)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற் றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியிலிருந்து மாலை 17:00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** பிரதிப் பொது முகாமையாளர் அலுவலகம் மின்சார சபை, ஆளுநர் விடுதி, யாழ். மாவட்ட செயலகம்,துளசி மஹால், யு.எஸ் விடுதி, மருத்துவமனை வீதி, கச்சேரி நல்லூர் வீதி சந்தி, முலவை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப்பிள்ளை, ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சாலை, பெரிய கரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ், தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு செண்ட் லார்ட்ஸ் ஐஸ் தொழிற்சாலை, நடுக்குடா, பேசாலை-ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady Lourds church pesalai, கட்டுகர்ரங்குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரிய கரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்புத் திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம் துள்ளுகுடியிருப்பு தும்பு - தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# புத்தகக் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம்,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துடன் இணைந்து நடாத்தும் புத்தகக் கண்காட்சி மற்றும் வீதி நாடக ஆற்றுகையானது இம்மாதம் 28 மற்றும் 29ம் திகதிகளில் மு.ப 9.00 மணி தொடக்கம் பி.ப 5.00 மணி வரை நாவலர் கலாசார மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் ஆர்வமுள்ளவர்கள் பங்குபற்றிப் பயனடையுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-7,9)

# நலிவுற்ற பெண்களுக்காக 1.6 மில்.அமெரிக்க டொலர்

### ஜப்பான் மனிதாபிமான உதவி

(கொழும்பு)

இலங்கையில் சமூக-பொருளாதார நெருக்கடியால் அதிகம் பாதிக்கப்பட்ட பெண்களுக்கான மனிதாபிமான உதவிக்காக ஜப்பான் அரசாங்கம் 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்களை ஐ.நா பெண்கள் அமைப்புக்கு வழங்கியுள்ளது.

இந்நிதி, "நெருக்கடியில் உள்ள பெண்களை வலுவூட்டல்" என்ற புதிய செயற்றிட்டத்தின் ஒரு பகுதியென்பதுடன், 2023 பெப்ரவரி முதல் 2023 டிசெம்பர் வரை செயற்படுவதுடன், இது பாலின மற்றும் பால் நிலை அடிப்படையிலான வன்முறையை எதிர்கொண்ட குறைந்தது 1,200 பெண்கள் உட்பட அவர்களின் குழந்தைகளுக்கு ஆதரவளிக்கும். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பளை குடிநீர் விநியோகத்திட்டம் விரைந்து முன்னெடுக்கப்படும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான்

**(தருமபுரம்)**

**கிளிநொச்சி மாவட்டம், பளை பிரதேசத்தில் தடைப்பட்டுள்ள குடிநீர் விநியோகத் திட்டத்தை விரைந்து முன்னெடுக்க நடவடிக்கை எடுப்பதாக, நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் ஜீவன் தொண்டமான், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் உறுதியளித்துள்ளார்.**

கடந்த புதன்கிழமை, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அமைச்சர் ஜீவன் தொண்டமானை அலுவலகத்தில் நேரில் சந்தித்து கலந்துரையாடிய போதே அமைச்சர் இவ் உறுதி மொழியை வழங்கியுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தின் பளை பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பகுதிகளுக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிநீரை வழங்கும் திட்டமானது, கிளிநொச்சி யாழ்ப்பாணம் நீர் வழங்கல் மற்றும் சுகாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதியுதவியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின் நிறைவில் பளை பிரதேசத்தின் ஒன்பது கிராமங்களைச் சேர்ந்த மக்கள் பயன் பெறுவார்கள் என்பதோடு எதிர்காலத்தில் இத் திட்டத்தை விரிவாக்கம் செய்யவும் முடியும். கடற்கரையை அண்டிய ஒடுங்கிய நிலப்பரப்பை கொண்ட பிரதேசமாக உள்ள பளையின் பெரும்பாலான கிராமங்களின் நிலத்தடி நீர் உவர் நீராகவே காணப்படுகிறது. இதனால் மக்கள் எதிர்கொள்ளும் இடர்பாடுகளுக்கான தீர்வாகவே இத் திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் முதற்கட்டப் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில், பளையில் அமைக்கப்பட்ட நீர்த்தாங்கியை கிளிநொச்சி நீர்த்தாங்கியுடன் இணைப்பதற்கான நீர்க்குழாய்கள் இன்மையால் இத்திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இது பற்றிபாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், அமைச்சரின் கவனத்திற்கு கொண்டுசென்றதை அடுத்து, நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் தலைவருக்கு உடனடியாகவே உரிய அறிவுறுத்தல்களை வழங்கிய அமைச்சர் ஜீவன் தொண்டமான், இத்திட்டத்தை விரைவாக நிறைவு செய்து தருவதாக உறுதியளித்துள்ளார். (4-6-316)

# கைதான் 12 இந்திய மீனவர்கள் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பகுதியில் அத்துமீறிய மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 12 பேரையும் ஏப்ரல் 6 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நெடுந்தீவு அருகே இந்திய மீனவர்கள் மீன்பிடித்துக் கொண்டிருந்த போது அப்பகுதியில் ரோந்து பணியில் ஈடுபட்ட இலங்கை கடற்படையினர் இரண்டு படகையும் அதிலிருந்த பன்னிரெண்டு மீனவர்களையும் கைது செய்தனர். கைது செய்யப்பட்ட மீனவர்களை மயிலிட்டி அழைத்து வந்த கடற்படையினர் கடற்றொழில் மற்றும் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்தனர்.

இந்திய மீனவர்களுக்கு எதிராக கடற்றொழில் நீரியல் வளத்திணைக்களத்தினரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் மேற்கொள்ளப்பட்ட வழக்குத்தாக்கலின் அடிப்படையில் விசாரணை மேற்கொண்ட ஊர்காவற்றுறை நீதிவான் பன்னிரெண்டு மீனவர்களையும் பதின்நான்கு நாட்களுக்கு விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (4-6-33)

# சிறுமி துஷ்பிரயோகம் இளைஞன் தலைமறைவு

(நெளுக்குளம்)

வவுனியா பாரதிபுரம் பகுதியில் கடந்த 22 ஆம் திகதி மாலை தனியார் வகுப்புக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 14 வயதுச் சிறுமி மீது பாலியல் துன்புறுத்தல் நடவடிக்கை மேற்கொள்ள முயற்சித்த இளைஞனுக்கு எதிராக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. எனினும் குறித்த இளைஞன் தலைமறைவாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வவுனியா பாரதிபுரம்பகுதியில் கடந்த புதன்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோரினால் நெளுக்குளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு மேற்கொள்ளப்பட்டது. முறைப்பாட்டையடுத்து பொலிஸார் குறித்த சிறுமியை வைத்தியசாலையில் அனுமதித்து மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அறிக்கை பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது. இதையடுத்து குறித்த இளைஞரைத் தேடிச் சென்ற போதும் இளைஞன் தலைமறைவாகியுள்ளது தெரிய வந் துள்ளது. (4-6-299)

# சுகாதார சீர்கேடாக இயங்கிய உணவகங்களுக்கு சீல் வைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர பொது சுகாதார பரிசோதகர்களால் ஒவ்வொரு மாதமும் கிரமமாக உணவகங்கள், பலசரக்கு கடைகள் என்பன பரிசோதிக்கப்பட்டு சுகாதார சீர்கேடாக இயங்கும் உணவகங்கள், பலசரக்கு கடைகளிற்கு எதிராக வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு வருகின்றன.

அந்தவகையில் கடந்த 21 ஆம் திகதி யாழ்நகர், அரியாலை பொது சுகாதார பரிசோதகர் பா.சஞ்சீவன் தலைமையிலான குழுவினரால் குறித்த பகுதிகளில் இயங்கும் உணவகங்கள், பலசரக்கு கடைகள் என்பன பரிசோதிக்கப்பட்டன.

இதன்போது அரியாலை பகுதியில் காலாவதியான பெருமளவான பொருட்கள் வைத்திருந்த பலசரக்கு கடை உரிமையாளர் சிக்கினார்.

அத்துடன் சுகாதார சீர்கேடான முறையில்இயங்கிய உணவகங்கள் யாழ்.நகர் பகுதியில் ஒன்றும் அரியாலை பகுதியில் ஒன்றும் பொது சுகாதார பரிசோதகர்களிடம் சிக்கின.

அதன் உரிமையாளர்கள் மூவரிற்கும் எதிராக 22 ஆம் திகதி யாழ். மேலதிக நீதிவான் நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன.

அன்றைய தினமே நீதிமன்றால் விசாரணைக்கு எடுத்துகொள்ளப்பட்ட நிலையில்பலசரக்கு கடை உரிமையாளரிற்கு 60,000/= தண்டம் விதிக்கப்பட்டது. அத்துடன் உணவக உரிமையாளர்களிற்கு 80,000/=, 30,000/= தண்டம் விதிக்கப்பட்டதுடன் உணவகத்தின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வரை உணவகங்களிற்கு சீல் வைத்து மூடுமாறு நீதிமன் றால் பொது சுகாதார பரிசோதகரிற்கு கட்டளை இடப்பட்டது. (4-6-33)

# வவுனியாவில் காசநோய் தொடர்பான விழிப்புணர்வு பேரணி முன்னெடுப்பு




(குருமன்காடு)

வவுனியாவில் காச நோய் தொடர்பாக மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு பேரணி ஒன்று இடம்பெற்றது.

உலக காச நோய் தினமான நேற்று வவுனியா மாவட்ட வைத்தியசாலை காசநோய் கட்டுப்பாட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் குறித்த விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

இதன்போது காச நோய் தொடர்பான கருத்தரங்கு ஒன்று காலை 9.30 மணிக்கு காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு அலுவலகத்தில் இடம்பெற்றிருந்தது. அதனைத் தொடர்ந்து, குறித்த பேரணி இடம்பெற்றது.

இப்பேரணியானது காச நோய் கட்டுப்பாட்டுப் பிரிவிலிருந்து புதிய பேருந்து நிலையம் ஊடாக சென்று, ஏ9 வீதியூடாக ஹொரவப்பொத்தானை வீதியியை அடைந்து, பசார் வீதியூடாக வவுனியா மணிக்கூட்டுக் கோபுர சந்தியை அடைந்து, பழைய பேருந்து நிலையம் சென்று அங்கிருந்து மீண்டும் வைத்தியசாலையினை அடைந்திருந்தது. (4-6-250)

# பொற்பதி அறிவாலயத்தின் ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

பொற்பதி அறிவாலயத்தின் 11 ஆவது ஆண்டு நிறைவு விழாவும் பொற்பதி இந்து அறநெறிப் பாடசாலையின் 12 ஆவது கலை விழாவும் சரஸ்வதி முன்பள்ளியின் 38 ஆவது கால்கோள் விழாவும் 38 ஆவது கலை விழாவும் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு பொற்பதி வீதி கொக்குவிலில் அமைந்துள்ள பொற்பதி அறிவாலயத்தில் பொற்பதி அறிவாலயத் தலைவர் சண்வாமதேவன் தலைமையில் இடம்பெறவுள்ளது. (4)

# வவுனியா விவசாய பண்ணை காணி வவு.பிரதேச செயலாளர் வசம்

(குருமன்காடு)

வவுனியா யாழ் வீதியில் அமைந்துள்ள அரச விதை உற்பத்தி விவசாய பண்ணையை பிரதேச செயலாளரை பொறுப்பேற்குமாறு வட மாகாண ஆளுநரினால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக வடமாகாண ஆளுநரினால் கடந்த 10 ஆம் திகதி கடிதத்தின் பிரகாரம் பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஜனாதிபதியின் வவுனியா விஜயத்தின் போது அபிவிருத்தி குழுவின் தலைவர் விடுத்த கோரிக்கையின் பிரகாரம் விவசாய நடவடிக்கைகளுக்கான விவசாய பண்ணைக்கு ஓமந்தை பகுதியில் 100 ஏக்கர் காணி வழங்குவதற்கு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் தற்போது விவசாய பண்ணை உள்ள 65 ஏக்கர் காணியை அபிவிருத்தி செயற்பாடுகளுக்காக பொறுப்பேற்குமாறும் குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் ஆளுநரின் குறித்த செயற்பாடு காரணமாக விவசாய அமைப்புக்கள் மற்றும் விவசாயிகள் தமது விசனத்தினை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை குறித்த காணியை வவுனியா பொருளாதார மத்திய நிலையம் மற்றும் சர்வதேச கிரிக்கெட் மைதானத்திற்காக கோரிய போது அக்கோரிக்கைகள் நிராகரிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (4-6-250-299)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குடும்பஸ்தர்...

யைச் சேர்ந்த 34 வயதான குறித்த நபர் தவசிகுளம் பகுதியில் திருமணம் செய்து வசித்து வந்த நிலையில் தூக்கிட்டு உயிரை மாய்த்திருப்பதாக தெரிய வருகின்றது.

உயிரிழந்தவரது சடலம் மீட்கப்பட்டு மரண விசாரணை மற்றும் பிரேத பரிசோதனைகளுக்காக சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,9,30)

## 10 பொருட்களின்...

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, செத்தல் மிளகாய் ஒரு கிலோவின் விலை 120 ரூபாயினால் குறைக்கப்பட்டு 1380 ரூபாய்க்கும் வெள்ளைப்பூண்டு ஒரு கிலோவின் விலை 25 ரூபாயினால் குறைக்கப்பட்டு 450 ரூபாய்க்கும் நெத்தலி ஒரு கிலோவின் விலை 25 ரூபாயினால் குறைக்கப்பட்டு 1100 ரூபாய்க்கும் விற்கப்படுகின்றன.

இதேவேளை, கடலை ஒரு கிலோவின் புதிய விலை 555 ரூபாயாகவும் உள்நாட்டு சம்பாவின் புதிய விலை 199 ரூபாயாகவும் 425 கிராம் ரின் மீனின் புதிய விலை 520 ரூபாயாகவும் பெரிய வெங்காயம் ஒரு கிலோவின் புதிய விலை 119 ரூபாயாகவும் உள்நாட்டு உருளைக்கிழங்கு ஒரு கிலோவின் புதிய விலை 270 ரூபாயாகவும் வெள்ளை சீனி ஒரு கிலோவின் புதிய விலை 210 ரூபாயாகவும் கடலைப் பருப்பு ஒரு கிலோவின் புதிய விலை 298 ரூபாயாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## சில மாதங்களில்...

தன்மையை அடைய முடியும் என மத்திய வங்கி ஆளுநர் நந்தலால் வீரசிங்க நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

இலங்கை புதிய யுகத்திற்குள் நுழைந்துள்ளதாக நான் கருதுகின்றேன் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் நிதி உதவிக்காக இலங்கை மக்களின் ஆதரவை பெறாத சீர்திருத்தங்களை நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாலேயே இலங்கை புதிய யுகத்திற்குள் நுழைந்துள்ளதாகக் கருதுவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-7,9)

## அரசுக்கு எதிராக...

விசேட கலந்துரையாடலின்போதே இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வரிக்கொள்கை தொடர்பில் ஜனாதிபதியுடன் முன்னெடுக்க திட்டமிடப்பட்டிருந்த கலந்துரையாடல் இதுவரை நடைபெறாமையினால் அவர்கள் இந்தத் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளனர். (ம-7,9)

## சுவீகரிக்கப்பட்ட...

னால் 229 ஏக்கர் காணி சுவீகரிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், தொல்பொருள் திணைக்களத்தினால் சுவீகரிக்கப்பட்ட 229 ஏக்கர் காணியையும் உடனடியாக விடுவித்து உரியவர்களுக்கு வழங்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

இது தொடர்பில் ஜனாதிபதி செயலகத்தால் முல்லைத்தீவு மாவட்ட அரசாங்க அதிபர் மற்றும் தொல்பொருள் திணைக்கள உதவி ஆணையாளருக்கு ஜனாதிபதி செயலகத்தால் கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9)

## தேர்தல் தொடர்...

உள்ளூராட்சி தேர்தலை நடத்துவது தொடர்பில் நிச்சயமற்ற நிலையில் விவாதம் முடிவடைந்த நிலையில் உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவது குறித்து தேர்தல்கள் ஆணைக்குழுவால் ஒரு முடிவுக்கு வரமுடியவில்லை என அவர் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதிலளித்த அவர், "உள்ளூராட்சித் தேர்தல் ஆணைக்குழுவின் நிச்சயமற்ற தன்மை குறித்து தேர்தல் ஆணைக்குழுவை விரைவில் கூட்டத்திற்கு அழைப்பேன் என்று நம்புகிறேன்," என்றார்.

உள்ளூராட்சித் தேர்தல் தொடர்பாக எதிர்க்கட்சிகளும் தேர்தல் ஆணைக்குழுவும் உயர் நீதிமன்றத்தில் பல வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளதாகவும், நீதிமன்றத் தீர்ப்புகளை அரசாங்கம் மதித்து அதன்படி செயல்படும் என்றும் பிரதமர் கூறினார்.

உள்ளூராட்சித் தேர்தலுக்கு நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து கேட்ட போது, புத்தாண்டுக்கு முன்னதாக அரச ஊழியர்களுக்கு இரண்டு சம்பளம் மற்றும் ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டிய பல முன்னுரிமைகளை அரசாங்கம் சந்திக்க உள்ளதாக கூறினார்.(ம-7,9)

# தமிழர்களின் உரிமையை அரசாங்கம் பறிக்கின்றது

## சபையில் சிறீதரன் எம்.பி

தமிழர்களின் உரிமைகளை எவ்வாறு பறிக்கலாம் என்பது குறித்து அரசாங்கம் விசேட கவனம் செலுத்தியுள்ளது. பிற இனங்களையும் அவர்களின் உரிமைகளையும் அழிக்கும் கொள்கையில் இருந்து அரசாங்கம் முதலில் வெளிவர வேண்டும், அதனை விடுத்து செயற்பட்டால் உலகில் உள்ள சொத்துக்கள் அனைத்தையும் கொண்டு வந்தாலும் இந்த நாடு ஒருபோதும் முன்னேற்றமடையாது என தமிழ் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறீதரன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு தொடர்பில் ஜனாதிபதியின் விசேட உரை மீதான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது, சர்வதேச நாணய நிதியத்தின் 2.9 பில்லியன் டொலர் நிதியுதவி ஒத்துழைப்புக்கு அனுமதி கிடைத்தவுடன் ஒரு தரப்பினர் பட்டாசு வெடித்து, கொண்டாடும் நிலை காணப்படுகிறது என்றார். (ம-7,9)

## வவுனியாவில்...

நேற்று மாலை மினிசூறாவளியுடன் கூடிய கடும் மழை காரணமாக மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், மரங்களும் முறிந்து வீழ்ந்துள்ளது.

காற்றின்வேகம் அதிகரித்தமையால் நகரின் முக்கிய வீதிகளில் மரங்கள் முறிந்து வீழ்ந்தது. இதனால் வீதிகளுடனான போக்குவரத்தும் சில மணிநேரம் தடைப்பட்டது. (ம-7,9,250)

## நீதி...

"நீதியரசர்கள் மீது கை வைக்காதே" எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்ட அமைதி வழி போராட்டம் உயர் நீதிமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

சட்டத்தரணிகள் மகா சபையினால் இந்த போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பில் இடைக்கால உத்தரவை பிறப்பித்த உயர் நீதிமன்ற நீதியரசர்களைபாராளுமன்ற சிறப்புரிமைக் குழு முன்பாக அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக எதிர்ப்பில் ஈடுபட்ட சட்டத்தரணிகள் தெரிவித்தனர். (ம-7,9)

SCIENCE CLASS
Group class (limited students only)
Mr.T.JATHURSHAN
(Teacher of Jaffna Hindu College)
Tamil medium & English medium
Srilankan syllabus for international schools's students
6-11
(C-6226)
Date : 25.03.2023 T.P: 076 198 7037
Manipay, Kokuvil

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 24/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1524
வெற்றி இலக்கங்கள்
சிம்மம் 3 1 8 6 3 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.03.24
சீட்டிழுப்பு இலக்கம் - 1099
V 37 43 60 66
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.03.24
சீட்டிழுப்பு இலக்கம் 3311
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
M 07 21 37 70
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 24/03/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1417
வெற்றி எழுத்து சுப்பர் இலக்க வெற்றி இலக்கங்கள்
H 04 31 48 65 70

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.03.24
சீட்டிழுப்பு இலக்கம் 378
வெற்றி இலக்கங்கள்
மிதுனம் 11 16 34 52 மிதுனம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/03/24
சீட்டிழுப்பு இலக்கம் 5069
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
P 4 5 7 4 1 6
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2044
நிறம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 2023.03.24
தினம் வெள்ளிக்கிழமை
C 10 29 37 72
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,906,400/-
DLB

சனிதா
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு திகதி : 2023.03.24
சீட்டிழுப்பு இல : 4205
வர்ணம் : செம்மஞ்சள்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,576,280/-
வெற்றி இலக்கங்கள்
03 15 52 74 R
DLB

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 304
சீட்டிழுப்பு திகதி 2023.03.24
வெள்ளிக்கிழமை
வெற்றி இலக்கங்கள் 08 19 24
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,024,320/-
DLB

ராசி
சுப்பர் ஜக்பொட் பரிசு வெல்லப்பட்டுள்ளது ரூ. 2,633,330/-
திகதி 2023-03-24
வெற்றி வாரம் 3756
வர்ணம் கரும் நீலம்
07 35 51 54
237254 56680 5671 633
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 46,157,870/-
DLB

லக்பிம
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
A 31 16 28 46 72
சுப்பர் இலக்கம்
சீட்டிழுப்பு வாரம் 1220
2023.03.24 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 316,126,708.20
DLB
தொலைபேசி : 011-2 333 546-47
Web : www.dlb.lk

அத கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
சீட்டிழுப்பு இல : 1870
சீட்டிழுப்பு திகதி : 2023.03.24
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 4,489,820/-
வெற்றி இலக்கங்கள்
04 12 35 52 W
DLB

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் பிரபல சோடா விற்பனை முகவர் நிலையத்தின் நெல்லியடி கிளைக்கு கணக்காளர் (கணனி அறிவுடைய) வேலையாட்கள் தேவை.
(இருபாலரும் விண்ணப்பிக்கலாம்)

- நெல்லியடி, கரவெட்டி, உடுப்பிட்டி பருத்தித்துறை போன்ற இடங்களில் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை.

**உங்கள் சுயவிபரக் கோவையை விளம்பர இலக்கம் 6220 வலம்புரி பத்திரிகை இல. 3, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம். என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.**

(C-6220)

# WIN Repiar

உங்கள் குளிர்சாதனப்பெட்டி, சலவை இயந்திரம் என்பன பழுதடைந்து விட்டதா?
உங்கள் இடத்திற்கே நாம் வந்து சிறந்த முறையிலும் உத்தரவாதத்துடனும் திருத்தித் தருகிறோம்

**076 906 4682**

(15034)

# விற்பனைக்கு

- லயன் பொமேரியன் நாய்க்குட்டி விற்பனைக்கு உண்டு.
- வாழைக்குட்டிகள் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு (15031)

**077 172 1074**

# மணமகன் தேவை

யாழ் இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 1997 அவிட்டம் 4 ஆம் பாதம் செவ்வாய் 4இல் அரச தொழில் செய்யும் விவாகரத்தான மணமகளுக்கு வெளிநாடு அல்லது உள்நாட்டு மணமகன் தேவை.

தொடர்பு :
**077 367 1062**

(15024)

# தீபம் கல்வி நிலையம்

இல.11, டேவிட் வீதி (கலைக்கோட்டம் அருகில்), யாழ்ப்பாணம்.

## புதிய கல்வியாண்டு – 2023

## தரம் 6 முதல் O/L வரை

தமிழ் மொழி மூலம், **English Medium**

**ஆரம்பம் - 25.03.2023, சனிக்கிழமை மாலை 3.30 மணி**

அன்பான பெற்றோர்களே!

- பெற்றோர், மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க இக் கல்வியாண்டு முதல் நிறுவன இயக்குனரும், விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பதில் பல வருட அனுபவம் கொண்டவருமான திரு.Kobi Sir அவர்கள் தரம் 6 தொடக்கம் 11 வரையான அனைத்து வகுப்புகளிற்கும் (தமிழ், ஆங்கில மொழி மூலம்) விஞ்ஞான பாடத்தைக் கற்பிப்பார் என்பதனைத் தங்களிற்கு அறியத் தருகின்றோம்.
- தரம் 10, 11 இற்கு மட்டும் வரலாறு, விஞ்ஞான பாடங்களிற்கு தனிப்பாட அனுமதி வழங்கப்படும். (நிபந்தனைக்கு உட்பட்டது)
- தரம் 10, 11 இற்கான ICT, வர்த்தகம், தமிழ் இலக்கியநயம், ஆங்கில இலக்கியநயம் (English Literatue) ஆகிய பாடங்களும் நடைபெறுகின்றன.

**அனுமதிகள் வழங்கப்படுகின்றது.** (15032)

☞ தீபம் எம் பிள்ளைகளின் எழுச்சி மிகு எதிர்காலம் | தொடர்புகளுக்கு : 077 224 7781

# உடனடி வேலை வாய்ப்பு

## நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

**V2 TRAVELS**

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மாவிட்டபுரம்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6225)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 30'000/-**
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

# உடனடி வேலை வாய்ப்புக்கள்

## EXECUTIVE OFFICER

- ✓ சம்பளம் - 25000/= தொடக்கம் 50000/= (நிபந்தனைகளுக்கு உட்பட்டது)
- ✓ வயது-22 தொடக்கம் 35
- ✓ தகுதி- பட்டதாரிகள் (ஆங்கில அறிவு அவசியமானது)

(C-6225)

**V2 TRAVELS**

AIRTICKETING, VISA SERVICES, INTERNATIONAL COURIER போன்ற துறைகளில் பயிற்சி அளித்து உடனடி வேலைவாய்ப்புக்கள் வழங்கப்படும்

49A, சப்பல் லேன் யாழ்ப்பாணம் | 0777-068-777

# வேலையாட்கள் தேவை

யாழ்நகரிலுள்ள பிரபல்யமான பிடைவை விற்பனை நிலையத்திற்கு அனுபவம் உள்ள பழக விரும்பும் ஆண், பெண் விற்பனையாளர்கள் உடன் தேவை. மேலும் சிட்டை எழுதுனர் ஆண், பெண் இருபாலாரும் விரும்பத்தக்கது.

(15028)

**074 073 4830**

# வேலையாட்கள் தேவை

**மாயவன் சந்நிதி முருகன் மிக்சர் தொழிற்சாலை**

மிக்சர், மஸ்கெட், தொதல் வேலை செய்ய தெரிந்தவர்கள் தேவை. ஆண், பெண் இருபாலாரும்

(15029)

**077 410 7405**
**076 379 3828**

# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சாவகச்சேரிப் பகுதியில் 26 1/2 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

## நிலப்பரப்பு

- சாவகச்சேரி மகளிர் கல்லூரி பிரதான வீதியுடன்.
- A9 பிரதான வீதியிலிருந்து 700m தூரம்.
- காய்க்கும் தென்னைகள் 155 உள்ளன.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் உள்ளது.
- விலை 19 லட்சம் முதல் 15 லட்சம் வரை

**பார்வையிடும் நேரம் :**
**காலை 06 மணி முதல் மாலை 06 மணிவரை**

**தரகர் தேவையில்லை**

தொடர்புகளுக்கு :- **ஜெயம்** (15030)

**077 814 7389**
**077 986 5457**

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

*அழைப்பு*



மண்ணில் 1928.08.10 | விண்ணில் 2023.02.26

அளவெட்டி வடக்கை வசிப்பிடமாகக் கொண்ட

## அமரர் திருமதி நவமணி வாதவூரர்

(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

எமது குடும்பத்தலைவி 26.02.2023 அன்று இறைபதம் அடைந்துவிட்டார். அன்னார் கண்டி/பெத்தேகம பாடசாலை, க/கோம்பறை பாடசாலை, க/தொலஸ்பாகை பட்டித்தலாவ சிங்கள தமிழ் வித்தியாலயம், யா/அளவெட்டி வடக்கு சீனன் கலட்டி ஞானோதயா வித்தியாலயம், யா/அளவெட்டி சதானந்தா வித்தியாலயம், கிளி/திருவையாறு மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியையாகப் பணிபுரிந்து ஓய்வுபெற்றவர் ஆவார்.

அவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வும் மதியபோசன நிகழ்வும் யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியிலுள்ள ஸ்ரீ காமாட்சி அம்மன் ஆலயம் (நாச்சிமார் கோவில்) திருமண மண்டபத்தில் 26.03.2023 நாளை ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 11.00 மணியளவில் நடைபெறவுள்ளது. அந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்கும்படி உற்றார்; உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

(15026)

இங்ஙனம் - பிள்ளைகள்
டாக்டர்.(திருமதி) சம்பூரணராணி கிருஷ்ணராசா (பாம்பாக்கா) சுன்னாகம் - 077 907 0001
வா.கலாதரன் J.P நல்லூர் - 077 856 1625, வா.லோகாதரன் - அளவெட்டி -077 987 3636
வா.தயாபரன் - கொக்குவில் - 077 691 5296

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.03.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.